**ඉඩම් මැනුම් සභාව**

**நில அளவைச்சபை**

**Land Survey Council**

# 2014

# වාර්ෂික වාර්තාව

# ஆண்டறிக்கை

# ANNUAL REPORT

ඉඩම් අමාත්‍යාංශය

காணி அமைச்சு

Ministry of Lands

# பொருளடக்கம்


1. தலைவரின் செய்தி 01

2. தொலைநோக்கும், செயற்பணி 02

3. நில அளவைச் சபையின் செயற்பாடுகள் 03

4. நில அளவைச் சபையின் அதிகாரங்கள் 04

5. 2014 ஆம் ஆண்டுக் காலப்பகுதிக்கான நில அளவைச் சபையின் செயலாற்று அறிக்கை 05

6. சபை ஊழியர்கள் 06

7. செயற்பாடுகள் 06

8. கல்வியும், பயிற்சியும் 09

9. நிதி நடவடிக்கைகள் பற்றிய மீளாய்வு 10

10. நிதியும், நிதி முகாமைத்துவமும் 11

11. 2014 ஆம் ஆண்டுக்கான இறுதிக் கணக்குகள் 12

    i நிதி நிலைமை அறிக்கை 13

    ii நிதிச் செயல்திறன் அறிக்கை 14

    iii தேறிய சொத்துகள் / மூலதனமாற்றங்களுக்கான கூற்று 15

    iv காசுப் பாய்ச்சல் கூற்று 16

    v 2014 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டின் கணக்குக் குறிப்புக்கள் 17

    vi 2014 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பொதுக் கணக்கீட்டுக் கொள்கைகள் 20

12. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 29

# 01. தலைவரின் செய்தி

நிலஅளவைச் சபை
நிலஅளவையாளா் நாயக அலுவலகம்
கிருல வீதி, நாரஹேன்பிட்ட
கொழும்பு – 05

01 ஜுன் 2015

ஒரு போட்டித் தன்மைமிக்க வா்த்தக உலகில் தரம் வாய்ந்ததும் தொழில் நிபுணத்துவமுடையதுமான அளவைச் சேவைகளில் கவனம் செலுத்துகின்ற தொழில் நிபுணத்துவமுடைய சூழலை வலுப்படுத்தும் சபை வெற்றிகரமாக செயற்பட்டு ஆற்றிய தொழிற்பாடுகளை முன்னிட்டு நான் மிகவும் திருப்தியடைகின்றேன்.

2002 ஆம் ஆண்டின் நில அளவைச் சட்டம் இல.17 ன் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட நில அளவைச் சபையின் பிரதானமான தொழிற்பாடுகளாக, நில அளவையாளா்களை பதிவு செய்தல், பதிவு செய்யப்பட்ட நில அளவையாளா்களுக்கு வருடாந்த தொழில் புரியும் உத்தரவுப் பத்திரம் வழங்குதல், பொது மக்களின் நலன் கருதி நில அளவையாளா்கள் தொடா்பான தகவல்களை பெற்றுக் கொடுத்தல், நில அளவையாளா்களின் தொழில்சாா் ஒழுக்கத்தினை பராமரித்தல், நில அளவைச் சபைக்கு பொது மக்களால் நில அளவையாளா்களுக்கு எதிராக கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளை பரீட்சித்தல் மற்றும் நில அளவையாளா்களுக்கான தொடா்ச்சியான தொழில்சாா் மேம்பாட்டு (CPD) பாடநெறிகளை நடாத்துதல் என்பனவாகும்.

நில அளவைச் சபை 2014 ஆம் ஆண்டிற்காக பதிவு செய்த நில அளவையாளா்கள் 1070 நபா்களுக்கு அளவை நடவடிக்கைகளில் ஈடுபடும்பொருட்டு வருடாந்த அளவை அனுமதிப் பத்திரத்தினைப் வழங்கியுள்ளது. மேலும் பதிவு செய்யப்பட்ட அனுமதிப் பத்திரம் பெற்ற நில அளவையாளா்களுக்கு எதிராக பொது மக்களினால் மற்றும் இதர நிறுவனங்களினாலும் சபைக்கு முன்வைக்கப்பட்டுள்ள தொழில்சாா் முறைகேடுகள் தொடா்பான முறைப்பாடுகளுக்காக 80 விசாரணைகள் 2014 ஆண்டுக் காலப்பகுதியில் சபை மூலம் நடாத்தப்பட்டு பூா்த்தி செய்யப்பட்டுள்ளன.

2014 ஆம் ஆண்டிலும் பதிவு செய்த நில அளவையாளா்கள் மத்தியில் தொழில்சாா் ஒழுக்கத்தினை பராமரித்தல் மற்றும் அவா்களுடைய தொடா்ச்சியான தொழில்சாா் மேம்பாடு தொடா்பாக நில அளவைச் சபை மிக ஆழ்ந்த கவனம் செலுத்தியதுடன் 2014 ஆண்டில் காணி அளவைகள் களம் தொடா்பான தொழில்சாா் மேம்பாட்டு பாடநெறி 09 இனை பதிவு செய்யப்பட்ட உத்தரவுப் பத்திரம் பெற்ற நில அளவையாளா்களுக்காக நில அளவைச் சபையின் அனுமதியுடன் நடாத்தப்பட்டது. பதிவு செய்யப்பட்ட உத்தரவுப் பத்திரம் பெற்ற நில அளவையாளா்களினால் தொடா்ச்சியான தொழில்சாா் மேம்பாட்டு பாடநெறியில (CPD) கலந்துகொள்வதற்கு காட்டப்படும் ஆா்வம் பாரட்டத்தக்கதும் குறிப்பிடத்தக்க கூடியதுமான ஓா் அம்சமாகத் திகழ்கிறது.

மேலும் நில அளவைச் சட்டம் இல. 39 ஆம் பந்தியின் ஒழுங்கு விதிகளுக்கமைய நிலஅளவைச் சபையில் பதிவு செய்ய எண்ணியுள்ள நபா்களை பதிவு செய்துகொள்வது தொடா்பான ஒழுங்கு முறைகள் மற்றும் நில அளவைச் சட்டம் இல. 02 ஆம் பந்தியின் ஒழுங்கு விதிகளுக்கமைய நிலஅளவையாளா் நாயகத்தினால் பதிவு செய்துள்ள நிலஅளவையாளா்களுக்காக தயாரிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப வழிகாட்டல் கையேடு நிலஅளவைச் சபையினால் 2015 ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் வெளியிட தீா்மானிக்கப்பட்டுள்ளது.

நிலஅளவைச் சபை மீளாய்வு ஆண்டுக்காலப் பகுதியில் சிறப்பாகவும் திறம்படவும் சேவையாற்றுவதற்கு ஒத்தாசையாக இருந்த சபை உறுப்பினா்கள், பதில் செயலாளா், கணக்காளா் (பகுதி நேரம்) மற்றும் நிலஅளவைச் சபை அலுவலா்கள் ஆகிய அனைவருக்கும் எனது மனமாா்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பி.எம்..பி. உதயகாந்த
தலைவா் / நிலஅளவைச் சபை

## 02. தொலைநோக்கும் செயற்பணியும்

### தொலைநோக்கு

“போட்டிமிக்க வர்த்தக உலகில் தரம் வாய்ந்ததும், தொழில் நிபுணத்துவமுடையதுமான அளவைச் சேவைகளில் கவனம் செலுத்துகின்ற தொழில் நிபுணத்துவமிக்க சூழலைப் பலப்படுத்துவதனூடாக நில அளவீட்டுக்கான ஒழுங்கு முறையான கட்டுமான முழுமை ஒன்றைப் பேணுவதன் மூலம் தேசிய அபிவிருத்திக்கான எமது பௌதீக இயற்கை வளங்களின் உச்சமட்ட நிலையான பயன்பாட்டினை உறுதிப்படுத்துவதே எமது தொலை நோக்காகும்.”

### செயற்பணி

“அளவைத் தொழில் மற்றும் அதன் செயன்முறைகள் சிறப்பான முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன என்பதையும், அவை தொழிற்துறையில் எதிர்பார்க்கப்பட்ட தொழில்நுட்பத் தேவைப்பாடுகள் மற்றும் ஒழுக்க நியமங்களுக்கு ஏற்றவாறான கல்வி மற்றும் பயிற்சி என்பவற்றைப் பெற்று அவற்றைத் தொழிலில் பிரயோகிப்பதனூடாக அளவைத் தொழிலை மேற்கொள்பவர்கள் தொழல்சார் நடவடிக்கைகளில் உயர்தர நியமங்களைப் பேணுவதனையும் உறுதி செய்வதே எமது செயற்பணியாகும்.”

## 03. 2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நில அளவைச் சட்டத்தின் பிரிவு 37 இல் உள்ளவாறு நில அளவைச் சபையின் செயற்பாடுகள்

2002 ஆம் ஆண்டின் நில அளவைச் சட்டம் இல.17 ன் கீழ் நில அளவைச் சபையானது நில அளவையாளர் நாயக அலுவலகம் (முதலாம் மாடி), இல.150, கிருல வீதி, கொழும்பு-5 இல் தாபிக்கப்பட்டது.

நில அளவைச் சட்டம் இல.17 பிரிவு 37 ல் கொடுக்கப்பட்டுள்ள நில அளவைச் சபையின் தொழிற்பாடுகள் பின்வருமாறு:-

அ. காணி அளவை தொடர்பான நியமங்களையும், நடைமுறை விதிகளையும் பேணுவதுடன் காணி அளவைத் தொழிலை மேற்கொள்பவர்கள் மத்தியில் தொழில்சார் ஒழுக்காற்றையும் பேணுதல்.

ஆ. நிலஅளவையாளர்களிடமிருந்து அவர்களைப் பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களாகப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களைப் பெறுவதுடன் அத்தகைய நில அளவையாளர்கள் விதிந்துரைக்கப்பட்ட தகைமைகளையும், அனுபவங்களையும் கொண்டுள்ளார்கள் என்றும், நிலஅளவைத் தொழிலில் ஈடுபடுவதற்கான ஆற்றல், அறிவு என்பவற்றைக் கொண்டுள்ளார்கள் என்றும் சபை திருப்தியடையும் இடத்து அவர்களுக்கான பதிவை மேற்கொள்ளுதல்.

இ. தொழிலில் ஈடுபடுவதற்கான வருடாந்த உத்தரவுப் பத்திரம் வழங்குவதற்காகப் பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களிடமிருந்து விண்ணபங்களைப் பெறுவதுடன் அத்தகைய நில அளவையாளர்கள் நில அளவைத் தொழிலில் ஈடுபடுவதற்கான அறிவு, ஆற்றல் என்பனவற்றைக் கொண்டுள்ளார்கள் என்று சபை திருப்தியடையும் பட்சத்தில் அவர்களுக்கு உத்தரவுப் பத்திரம் வழங்குதல்.

ஈ. நிலஅளவைத் தொழிலில் ஈடுபடும் நிலஅளவையாளர்கள் மத்தியில் உயர் தொழில்சார் கல்வித் தரங்கள் பேணப்படுவதை மேம்படுத்தல்.

உ. நிலஅளவைத் தொழிலில் ஈடுபடும் நில அளவையாளர்கள் மற்றும் வருடாந்த தொழில் புரியும் உத்தரவுப் பத்திரத்தைப் பெறுவதற்கு விண்ணபித்தவர்களின் அறிவு, ஆற்றல்களை விருத்தி செய்வதன் ஊடாக தொழில்சார் வளர்ச்சிக்காக வழங்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்களை அதிகரித்தல்.

ஊ. நிலஅளவைத் துறையில் கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளை அங்கீகரித்தல், செயன்முறை அனுபவத் தேவைப்பாடுகளை நிர்ணயம் செய்தல் மற்றும் நில அளவையாளர்களைப் பதிவு செய்வதற்காகவும், அவர்களுக்கு வருடாந்த தொழில் புரியும் உத்தரவுப் பத்திரம் வழங்குவதற்குமான தகைமைப் பரீட்சைகள் மற்றும் தொழில்சார் நேர்முகப் பரீட்சைகள் போன்றவற்றை நடத்துதல்.

எ. நில அளவைத் தொழிலில் ஈடுபடும் நில அளவையாளர்களின் கல்வி – பயிற்சி மற்றும் அங்கீகாரம் என்பவற்றில் சீரானதும் பரஸ்பரமானதொரு தன்மையை பேணும் நோக்கத்திற்காக வெளிநாடுகளில் உள்ள சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் இணைந்து பரஸ்பர ஏற்பாடுகளை மேற்கொள்ளுவதும், கலந்துரையாடல்களில் ஈடுபடுவதும்.

ஏ. அளவைத் துறையில் வேண்டப்பட்ட கல்வித் தரங்களைப் பேணும் நோக்குடன் இலங்கையில் காணி அளவை மற்றும் காணித் தகவல் தொடர்பான கல்வி, பயிற்சி நெறிகளை மேற்கொள்ளும் நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயற்படல்.

ஐ. அளவைத் துறையில் உயர் தொழில்சார் தரங்களைப் பேணும் நோக்குடன் இலங்கையின் ஏனைய தொடர்புடைய அமைப்புக்களுடன் ஒருங்கிணைந்து செயற்படல்.

## 04. நில அளவைச் சபையின் அதிகாரங்கள்.

அ. நிலஅளவைச் சபைக்கான ஏதேனும் அசைவுள்ள மற்றும் அசைவற்ற சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்கு குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் அவற்றை பெறுவதற்கு அல்லது வழங்குவதற்கு, ஈடுவைப்பதற்கு, அடகு வைப்பதற்கு, விற்பனை செய்வதற்கு அல்லது அவற்றை வேறு ஏதேனும வகையில் அகற்றுவதற்கும்.

ஆ. சபையானது காசாகவோ அல்லது வேறு வகையிலோ வரப்பிரசாதங்கள், கொடைகள் அல்லது அன்பளிப்புக்கள் போன்றவற்றை ஏற்றுக்கொள்வதற்கும், தனது தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்காக அவற்றிற்கு விண்ணப்பிப்பதற்கும்;

இ. சபை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அவசியமாக இருக்கக் கூடியவாறான அலுவலர்களையும், ஊழியர்களையும் நியமனம் செய்வதற்கு

ஈ. அவ்வாறு நியமனம் செய்யப்பட்ட அலுவலர்களுக்கும், ஊழியர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பள விபரங்களை தீர்மானிப்பதற்கும்.

உ. சபையின் செயற்பாடுகளை வினைத் திறமையுடன் நிறைவேற்றுவதற்கான செயற்குழுக்களை நியமித்தல்

ஊ. சபையின் அலுவலர்களுக்கும், ஊழியர்களுக்கும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை ஏற்படுத்துதல் மற்றும் சேமநலன்கள், பொழுது போக்கு வசதிகளை வழங்குதல்.

எ. சபையின் நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பான விதிப் பிரமாணங்களை நிர்ணயித்தல்.

ஏ. பொதுவாக சபையின் செயற்பாடுகளை நேர்த்தியாக மேற்கொள்வதற்கு ஏதுவாக அமையக் கூடிய அவ்வாறான ஏனைய அனைத்து விடயங்களையும் மேற்கொள்ளுதல்.

## 05. 2014 ஆம் ஆண்டுக் காலப்பகுதிக்கான நில அளவைச் சபையின் செயலாற்று அறிக்கை

**2014 டிசம்பர் 31 இல் உள்ளவாறு நிலஅளவைச் சபையின் உறுப்பினர்கள் வருமாறு**

| | | |
|---|---|---|
| 1. | திரு. பி.எம்.பி. உதயகாந்த | - தலைவர் |
| 2. | திரு. எஸ்.எம்.பி.பி சங்கக்கார | - உபதலைவர் |
| 3. | திரு. எஸ்.டி.பி.ஜே தாம்பேகம | - உறுப்பினர் |
| 4. | திரு. கே.ஆர்.எம்.யு. பண்டார | - உறுப்பினர் |
| 5. | திரு. சீ.டீ.எஸ். குணதிலக | - உறுப்பினர் |
| 6. | திரு. கே.ஏ.எம். டீ அல்விஸ் | - உறுப்பினர் |
| 7. | திரு. டி.டி.வை அபேவர்தன | - உறுப்பினர் |

**மீளாய்வு ஆண்டுக்காலப் பகுதியில் நில அளவைச் சபை உறுப்பினர்கள் வருமாறு:**

| | | | |
|---|---|---|---|
| 1. | கலாநிதி கே. தவலிங்கம் | - தலைவர் | - 25.07.2013 - 05.03.2014 |
| 2. | திரு. நிஹால் குணவர்தன | - உபதலைவர் | - 06.03.2014 - 28.05.2014 |
| 3. | திரு. பி.எம்.பி. உதயகாந்த | - தலைவர் | - 25.07.2013 - மீளாய்வு ஆண்டுக் காலத்திற்குள் |
| 4. | திரு. நிஹால் குணவர்தன | - உபதலைவர் | - 03.12.2013 - 025.03.2014 |
| 5. | திரு. பி.எம்.பி. உதயகாந்த | - உபதலைவர் | - 06.03.2014 - 28.05.2014 |
| 6. | திரு. எஸ்.எம்.பி.பி சங்கக்கார | - உறுப்பினர் | - 29.05.2014 - மீளாய்வு ஆண்டுக் காலத்திற்குள் |
| 7. | திரு. எஸ்.டி.பி.ஜே தாம்பேகம | - உறுப்பினர் | - 25.07.2013 - மீளாய்வு ஆண்டுக் காலத்திற்குள் |
| 8. | கலாநிதி கே.ஆர்.எம்.யு. பண்டார | - உறுப்பினர் | - 01.01.2012 - மீளாய்வு ஆண்டுக் காலத்திற்குள் |
| 9. | திரு. திரு. சீ.டீ.எஸ். குணதிலக | - உறுப்பினர் | - 01.01.2012 - மீளாய்வு ஆண்டுக் காலத்திற்குள் |
| 10. | திரு. கே.ஏ.எம் டீ அல்விஸ் | - உறுப்பினர் | - 01.01.2012 - மீளாய்வு ஆண்டுக் காலத்திற்குள் |
| 11. | திரு. டி.டி.வை அபேவர்தன | - உறுப்பினர் | - 25.10.2013 - மீளாய்வு ஆண்டுக் காலத்திற்குள் |

**நில அளவைச் சபையின் கூட்டங்களில் பங்குபற்றிய உறுப்பினர்களின் வருகை பின்வருமாறு காணப்பட்டது.**

| | | | |
|---|---|---|---|
| 1. | கலாநிதி கே. தவலிங்கம் | - தலைவர் | - 03 கூட்டங்கள் |
| 2. | திரு. நிஹால் குணவர்தன | - உபதலைவர் | - 02 கூட்டங்கள் |
| 3. | திரு. பி.எம்.பி. உதயகாந்த | - தலைவர் | - 15 கூட்டங்கள் |
| 4. | திரு. நிஹால் குணவர்தன | - உபதலைவர் | - 03 கூட்டங்கள் |
| 5. | திரு. பி.எம்.பி. உதயகாந்த | - உபதலைவர் | - 02 கூட்டங்கள் |
| 6. | திரு. எஸ்.எம்.பி.பி சங்கக்கார | - உறுப்பினர் | - 15 கூட்டங்கள் |
| 7. | திரு. எஸ்.டி.பி.ஜே தாம்பேகம | - உறுப்பினர் | - 14 கூட்டங்கள் |
| 8. | கலாநிதி கே.ஆர்.எம்.யு. பண்டார | - உறுப்பினர் | - 18 கூட்டங்கள் |
| 9. | திரு. திரு. சீ.டீ.எஸ். குணதிலக | - உறுப்பினர் | - 20 கூட்டங்கள் |
| 10. | திரு. கே.ஏ.எம் டீ அல்விஸ் | - உறுப்பினர் | - 20 கூட்டங்கள் |
| 11. | திரு. டி.டி.வை அபேவர்தன | - உறுப்பினர் | - 18 கூட்டங்கள் |
| 12. | செல்வி திமாலி டீ சில்வா | - திறைசேரியின் பிரதிநிதி | - 09 கூட்டங்கள் |

## 06 நில அளவைச் சபை அலுவலகர்கள்

| | | |
|---|---|---|
| 1. | திரு. ஜி.டி.எஸ்.கே. குணரட்ன<br>பதில் செயலாளர் | 01.01.2009 முதல் இன்று வரை |
| 2 | திரு. ரஞ்சித் மஹகும்புர<br>கணக்காளர் (பகுதி நேர அடிப்படையில்) | 01.03.2008 முதல் இன்று வரை |
| 3 | செல்வி டபிள்யூ.ஏ.எஸ். பிரியதர்சினி<br>கணனிப் பிரயோக உதவியாளரும்,<br>எழுதுநரும் | 24.05.2004 முதல் இன்று வரை |
| 4. | திருமதி ஆர்.எம். நிலந்தி ரத்னாயக<br>கணனிப் பிரயோக உதவியாளரும்,<br>எழுதுநரும் | 18.03.2012 முதல் இன்று வரை |
| 5 | திரு. ரி.ஜி. பர்னாந்து<br>அலுவலக சேவகர் | 15.07.2004 முதல் இன்று வரை |

## 07 செயற்பாடுகள்


### பதிவு செய்தல்

மீளாய்வு ஆண்டுக் காலப்பகுதியில் 55 புதிய நில அளவையாளர்கள் பதிவு செய்துள்ளதுடன் 31.12.2014 இல் உள்ளவாறு பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களின் மொத்த எண்ணிக்கை 20305 ஆகக் காணப்பட்டது. இந்த நில அளவையாளர்களுக்கு பதிவுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளது.

### வருடாந்த தொழில் புரியும் உத்தரவுப் பத்திரம்

மீளாய்வு ஆண்டுக் காலப்பகுதியில் 1070 பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்கள் வருடாந்த தொழில் புரியும் உத்தரவுப் பத்திரத்தினைப் பெற்றுக்கொண்டார்கள். 2014 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட உத்தரவுப் பத்திரங்களின் தொகை 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து சற்று குறைவடைந்து உள்ளது.

**2013, 2014 இல் வழங்கப்பட்ட மொத்த உத்தரவுப் பத்திரம்**




2014 ஜனவரி 31 ஆம் திகதி வரை வருடாந்த உத்தரவுப்பத்திரம் பெற்ற நில அளவையாளர்களின் முதலெழுத்துக்களுடனான பெயர்கள், பதிவு இலக்கங்கள், மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் அடங்கிய விபரங்கள் 2014 மார்ச்சு 28 ஆம் திகதிய 1856 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.


உத்தரவுப் பத்திரம் பெற்ற சகல நில அளவையாளர்களினதும் பதிவு இலக்கங்கள், முதலெழுத்துக்களுடன் கூடிய பெயர்கள், முழுப் பெயர்கள், தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் மாவட்டத்தின் பெயர், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள், வருடாந்த உத்தரவுப்பத்திரங்களின் எண்ணிக்கை மற்றும் உத்தரவுப்பத்திரம் காலவதியாகும் காலம் போன்ற தகவல்கள் உள்ளடங்கிய விபரங்கள் www.survey.gov.lk என்ற இணையத்தள முகவரியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இத்தகவல்கள் ஒவ்வொரு மூன்று மாத காலத்திற்கு ஒருமுறை நாளது வரைவுபடுத்தப்படும்..

## பொது மக்களுக்கான தகவல்

நிலஅளவைச் சபையினால் வழங்கப்படடு வரும் சேவையை அறிந்த பொது மக்கள் தொடர்ச்சியாகவும் மறைந்த அல்லது உயிருடன் இருக்கும் பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும், மேலும் உத்தரவுப்பத்திரம் பெற்ற நில அளவையாளர்களினால் தயாரிக்கப்பட்ட சுமார் 100 வருடங்களுக்கும் மேல் பழைமைவாய்ந்த மூலக் காணி அளவைக் கிடைப்படங்களின் பிரதிகளை பெற்றுக்கொள்வதற்கும் நில அளவைச் சபையின் உதவியினை நாடிநிற்கின்றார்கள். இவ்வாறான தகவல்களை உடனடியாக வழங்கும் எண்ணத்துடன் சொந்த முகவரிகள், பதிவு இலக்கங்கள் மேலும் உத்தரவுப் பத்திர இலக்கங்கள் போன்ற தகவல்களை சேகரிப்பதற்கான ஒரு தரவுத்தளத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பதிவு செய்த உத்தரவுப் பத்திரம் பெற்ற நிலஅளவையாளர்களினால் தயாரிக்கப்பட்ட மூலக் கிடைப்படங்களின் பிரதிகளை பெற்றுக்கொள்வதற்கு உதவியாக அமையும் பொருட்டு அவர்களது தொடர்பு (தொலைபேசி) இலக்கங்களையும் தரவுத்தளத்தில் சேர்க்கப்பட்டுள்ளதுடள், இது பொதுமக்களுக்கு உரிய நபர்களை தொடர்புகொள்வதற்கு வழிவகுக்கும். ஆயினும், நில அளவைச் சபையானது இவ்வாறன சேவைகளையிட்டு பூரண திருப்தி கொள்ளவில்லை. ஏனெனில், இது பொதுமக்களுக்கு ஒழுங்கான முறையில் பழைமை வாய்ந்த கிடைப்படங்களை பெற்றுக்கொள்வற்கு முழுமையாக உதவவில்லை. குறித்த மீளாய்வு ஆண்டுக் காலப் பகுதியில் இவ்வாறான 322 விசாரணைகள் காணப்பட்டன.

## நில அளவைச் சபையினால் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட முறைப்பாடுகள்.

தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளின் மொத்த எண்ணிக்கை




2013 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் மிகுதியாக இருந்த 24 முறைப்பாடுகள் முன் கொண்டுவரப்பட்டதுடன் தொழில் புரியும் உத்தரவுப் பத்திரம் பெற்ற நில அளவையாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட தொழல்சார் முறைகேடுகள் தொடர்பாக 82 முறைப்பாடுகள் 2014 ஆம் ஆண்டு பொது மக்களிடமிருந்து கிடைக்கப்பெற்றன. நில அளவைச் சபை 39 ஆரம்ப கட்ட விசாரணைகளை மேற்கொண்டதுடன், 41 முறையான விசாரணைகளை மேற்கொண்டது. 2014 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் நில அளவைச் சபையினால் இவ்வாறான 82 முறைப்பாடுகளுக்கு தீர்வினை வழங்கக் கூடியதாக இருந்ததுடன், மேலும் இவ்வருட இறுதியில் 24 முறைப்பாடுகள் மாத்திரமே தீர்த்து வைக்கப்படாமல் நிலுவையாக இருந்தது.

எவ்வாறாயினும் சில முறைப்பாடுகளுக்கு 2012 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நில அளவைச் சட்ட ஒழுங்கு விதிகளுக்கமைய நில அளவைச் சபையினால் தீர்வினை வழங்க முடியாது இருந்ததுடன், சில முறைப்பாடுகள் நீதிமன்ற கட்டளைப் பிரகாரம் கௌரவ நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட நீதிமன்ற ஆணையாளரினால் மேற்கொள்ளப்படும் அளவை தொடர்பானவையாக இருந்ததுடன், சில முறைப்பாடுகள் கௌரவ நீதிமன்றத்தினால் விசாரனை மேற்கொள்ளப்பட்டு வரும் வழக்கு தொடர்பானவையாக இருந்ததுடன், இன்னும் சில முறைப்பாடுகள் நிரூபிக்கத்தக்க சான்றுகள் இல்லாது இருந்ததுடன் முறையீட்டாளர்களுக்கு நிவாரணத்தை வழங்குவதற்கு நில அளவைச் சபையினால் முடியாது போனது.

2002 ஆம் ஆண்டின் நில அளவைச் சட்டம் இல.17 ன் கீழ் நில அளவைச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட முறையான விசாரணைகளுக்கு ஏற்ப தொழில்சார் முறைகேடுகளில் ஈடுபட்டு உத்தரவுப்பத்திரம் இடைநிறுத்தப்பட்ட மற்றும் பதிவு இரத்து செய்யப்பட்டவர்கள் தொடர்பான தகவல்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அவை பின்வருமாறு

| கோவை | பதிவு இலக்கம் | நில அளவையாளர்களின் முழுப் பெயர் | விசாரணையின் மூலம் எடுக்கப்பட்ட தீர்மானம் |
|---|---|---|---|
| LSC/5/616 | 19930095 | புத்திபே படலகே பிரமதிலக | உ. பத்திரம் இடைநிறுத்தப்பட்டுள்ளது 2014-06-01 முதல் 2014-08-30 வரை |
| LSC/5/299 | 19710708 | ஹிக்கடுவ விதானகே அமலபால டீ சில்வா | உ. பத்திரம் இடைநிறுத்தப்பட்டுள்ளது 2014-08-141 முதல் 2015-08-13 வரை |
| LSC/5/597 | 20040849 | சுட்டம்பிரல்லகே டொன் ஜோசம் காமினி தயா அரசகுலரட்ன | பதிவு இரத்து செய்யப்பட்டுள்ளது 2014.0814 |
| LSC/5/633 | 19901048 | ஜோசம் ரோஹன்த அஜித் டீ ஜக்குலின் செனவிரத்ன | உ. பத்திரம் இடைநிறுத்தப்பட்டுள்ளது 2014.10.01 முதல்2014.12.31 வரை |
| LSC/5/692 | 19910791 | ஹ்஁னுவல பொல்வத்தேகே சரத் ராஜபக்ஷ | உ. பத்திரம் இடைநிறுத்தப்பட்டுள்ளது 2015-01-01 முதல் 2015-03-31 வரை |
| LSC/5/693 | 19650105 | டொன் டேவிட் கிளரன்ஸ் ஹீன்தெனிய | உ. பத்திரம் இடைநிறுத்தப்பட்டுள்ளது 2015.01.01 – 2015.06.30 |

# 08 கல்வியும் பயிற்சியும்

### தொடர்ச்சியான தொழில்சார் மேம்பாட்டு பயிற்சி நெறிகள். (CPD)

நில அளவையில் முக்கியமானதொரு திருப்புமுனையாக தொடர்ச்சியான தொழில்சார் மேம்பாட்டு பயிற்சி நெறிகள் **(CPD)** திகழ்கின்றன. இதனை அவதானித்த நில அளவைச் சபையானது நிலஅளவையில் தொழில் நிபுணத்துவம் பெற்றவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய தொழில்நுட்பத்தினை தற்போதைய அபிவிருத்திக்கு நில அளவைக் களத்தில் பயன்படுத்துவது தொடர்பான பயிற்சிப் பாடநெறிகன் மற்றும் செயலமர்வுகளை பதிவு செய்யப்பட்ட உத்தரவுப்பத்திரம் பெற்ற நில அளவையாளர்கள் தொடர்வதற்கு ஆர்வமூட்டியது.

### இலங்கை நில அளவைத் திணைக்களம் மற்றும இலங்கை நிலஅளவையாளர் நிறுவனம் மற்றும் ஏனைய மாவட்ட உத்தரவுப் பத்திரம பெற்ற நிலஅளவையாளர் சம்மேளம் ஆகியவற்றால் நடாத்தப்பட்ட தொடர்ச்சியான தொழில்சார் மேம்பாட்டு பயிற்சி நெறி (CPD)

நிலஅளவைச் சபையின் வழிகாட்டலின் கீழ் தொடர்ச்சியான தொழில்சார் மேம்பாட்டு பயிற்சி நெறியினை **(CPD)** பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்கள், பதிவு செய்யப்பட்ட உத்தரவுப் பத்திரம் பெற்ற நில அளவையாளர்கள் ஆகியோருக்கு நடாத்துவதற்கு இலங்கை நில அளவையாளர் நிறுவனம், நில அளவைத் திணைக்களம் மற்றும் மாவட்ட உத்தரவுப் பத்திரம் பெற்ற நில அளவையாளர் சம்மேளனம் (கம்பஹா/பதுளை / கண்டி) ஆகிய நான்கு (04) நிறுவனங்கள் காட்டிய அதிக ஆர்வத்தினை நில அளவைச் சபையானது திருப்தியுடன் சுட்டிக் காட்டுவதோடு அப் பயிற்சி நெறிகள் நில அளவைச் சபையால் தொடர்ச்சியான தொழில்சார் மேம்பாட்டு பயிற்சி நெறிகளாக **(CPD)** ஏற்கப்பட்டது.

### முதல் முறையாக உத்தரவுப் பத்திரம் பெற்றுக்கொண்டவர்களுக்கான செயலமர்வு

நில அளவைச் சபை இன்னுமொரு ஆற்றுப்படுத்துகை பாடநெறியினை ஒன்றினை ஆரம்பித்தது. இச்செயலமர்வு நிலஅளவைச் சபையின் ஆயுதமான வருடாந்த உத்தரவுப் பத்திரத்தினை முதன் முறையாகப் பெற்ற நிலஅளவையாளர்கள் நலன் கருதியும் தமது தொழிலை நில அளவைத்துறையில் திறம்பட முன்னெடுத்துச் செல்லும் பொருட்டும் ஆரம்பித்தது. அதிக அனுபவமிக்கவர்களும், உண்மையான திறமையுள்ள தேர்ச்சிமிக்க பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களில் இருந்து பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களுக்கு போதிப்பதற்காக தேர்ந்தேடுக்கப்பட்டுள்ளார்கள்.


### நடாத்தப்பட்ட தொடர்ச்சியான தொழில்சார் மேம்பாட்டு பயிற்சி நெறியின் சுருக்கம்.

| | நிறுவனத்தின் பெயர் | தொடர்ச்சியான தொழில்சார் மேம்பாட்டு (CPD) பயிற்சி நெறியின் பெயர் | பயிற்சி நெறிகள் நடாத்தப்பட்ட திகதி |
|---|---|---|---|
| 01 | நில அளவைச் சபை **(LSC)** | ஆற்றுப்படுத்தும் பயிற்சி நெறி | 2014.03.07 |
| 02 | பதுளை மாவட்ட பதிவு செய்யப்பட்ட உத்தரவுப் பத்திரம் பெற்ற நிலஅளவையாளர் சம்மேளம் | காணி மதிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டம் | 2014.03.22 |
| 03 | இலங்கை நில அளவைத் திணைக்களம் | Aceditration சான்றிதழ் பயிற்சிப் பட்டறை | 2014.04.28 |
| 04 | இலங்கை நில அளவையாளர் நிறுவனம் | சொத்து மதிப்பீடு | 2014.06.11 |
| 05 | கம்பஹா மாவட்ட உத்தரவுப் பத்திரம் பெற்ற நிலஅளவையாளர் சம்மேளம் | பிம்சவிய | 2014.06.24 |
| 06 | நில அளவைச் சபை **(LSC)** | தொழில்நுட்ப பயிற்சிப் பட்டறை | 2014.06.27 |
| 07 | கம்பஹா மாவட்ட உத்தரவுப் பத்திரம் பெற்ற நிலஅளவையாளர் சம்மேளம் | காணிச் சட்டங்கள் | 2014.08.24 |
| 08 | கண்டி மாவட்ட உத்தரவுப் பத்திரம் பெற்ற நிலஅளவையாளர் சம்மேளம் | பூகோள இடங்காணல் முறைமை | 2014.08.31 |
| 09 | நில அளவைச் சபை **(LSC)** | தொழில்நுட்ப பயிற்சி நெறி | 2014.09.12 |

## 09 நிதி நடவடிக்கை பற்றிய மீளாய்வு

2013 – 2014 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான வருமானம்

மொத்தவருமானம் 2013 - 2014




குறித்த ஆன்டுக் காலப்பகுதியில் நிலஅளவைச் சபையின் மொத்த வருமானம் முன்னைய வருடத்திற்கான வருமானம் ரூபா 4,583,594.00 உடன் ஒப்பிடும் போது ரூபா 4,893,381.00 தொகையிடப்பட்டுள்ளது. இதனை மேலே உள்ள வரைவு காட்டுகிறது.

குறித்த ஆண்டுக் காலப்பகுதியில் சபையின் செலவினம் ரூபா 4,425,871.00 குறைவாகப் பதிவாகி ரூபா 467,510.00 ஆகத் தொகையிடப்பட்டுள்ளது.

2010, 2011, மற்றும் 2012 ஆம் ஆண்டைப் போல் 2013 ஆம் ஆண்டும் திறைசேரியினால் எவ்விதமான நிதிகளும் வழங்கப்படவில்லை. மேலும் 2013 ஆம் ஆண்டில் மூலதனச் செலவினம் ரூபா 116,290.00 ஆக இருந்தது.

## 10. நிதிகளும் நிதி முகாமைத்துவம்

நில அளவைச் சபையின் வருமானம் பிரதானமாகப் பதிவு செய்யப்பட்ட உத்தரவுப் பத்திரம் பெற்ற நிலஅளவையாளர்களிடமிருந்து அவர்களுக்கான உத்தரவுப் பத்திரம் வழங்குவதற்காக பெறப்பட்ட கட்டணம், தொடர்ச்சியான தொழில்சார் மேம்பாட்டு பயிற்சி நெறிகள் **(CPD)** மற்றும் முறையான விசாரனைகளுக்கான செலவினம் தவறிழைத்த பதிவு செய்யப்பட்ட நிலஅளவையாளர்களிடம் இருந்து அறவிடப்பட்ட கட்டணம் என்பனவற்றினால் பெறப்பட்டது.

2014.12.31 இல் உள்ளவாறு ரூபா 9,950,203.00 தொகை இலங்கை வங்கியின் நிலையான வைப்புக்களில் உள்ளன.

# 2014 ஆம் ஆண்டுக்கான இறுதிக் கணக்குகள்

# காணி அமைச்சு
# நில அளவைச் சபை

## 31, டிசம்பர் 2014 இல் உள்ளவாறான
## நிதி நிலைமை அறிக்கை

| விபரங்கள் | குறிப்பு | 2014 | | 2013 | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **சொத்துக்கள்** | | | | | |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | |
| காசும் காசுக்கு சமனானவையும் | 1 | 7,461,850 | | 8,518,410 | |
| கிடைக்கவேண்டியவை | 2 | 147,374 | | 189,376 | |
| இடர்கடன் | 3 | 222,407 | | 292,527 | |
| விழா முற்பணம | | 3,000 | 7,834,631 | - | 9,002,313 |
| **நடைமுறைச் சொத்துக்கள் அல்லாதவை** | | | | | |
| நிலையான வைப்பு | 4 | 2,951,147 | | 1,325,249 | |
| சாதனங்களும் உபகரணங்களும் | 5 | 517,019 | 3,468,166 | 523,610 | 1,848,859 |
| மொத்தச் சொத்துக்கள் | | | 11,302,797 | | 10,851,172 |
| **பொறுப்புகள்** | | | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | | |
| கிடைக்கப்பெற்ற உத்தரவுப்பத்திர முற்பணம் | | 2,401,250 | | 2,481,275 | |
| செலுத்தவேண்டியவை | | 254,723 | | 248,000 | |
| அட்டுறுச் செலவு | 6 | 328,134 | | 279,536 | |
| | | 8,819 | 2,992,926 | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள் அல்லாதவை** | | | - | | - |
| மொத்தப் பொறுப்புக்கள் | | | 2,992,926 | | 3,008,811 |
| நிகர சொத்துகள் மதிப்பு | | | **8,309,871** | | **7,842,361** |
| - | | | | | |
| **நிகர சொத்துகள் / மூலதனம்** | | | | | |
| மூலதன பங்களிப்பு | | | | | |
| பொது திறைசேரி | | 1,043,030 | | 1,043,030 | |
| திரண்ட நிதி | | 6,799,331 | | 5,748,018 | |
| மிகையும் / குறையும் | | 467,510 | | 1,051,313 | |
| **மொத்த நிகர சொத்துகள் / மூலதனம** | | | **8,309,871** | | **7,842,361** |
| | | | | | |

மேற்தரப்பட்டுள்ள நிதிநிலைமை அறிக்கை நிதிப்பிரமாணம் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் சான்றுப்படுத்துகிறேன்.

நிலஅளவைச் சபை உறுப்பினர்களே மேலே தரப்பட்டுள்ள நிதிநிலைமை அறிக்கையினை தயாரித்தல் மற்றும் முன்னிலைப்படுத்தல் தொடர்பாக பொறுப்புடையவர்கள் என்பதுடன் நிலஅளவைச் சபைக்காக கீழ்வரும் அலுவலர்கள் கையொப்பம் இட்டுள்ளார்கள்.

| | | |
|---|---|---|
| எஸ்.எம்.பி.பி. சங்கக்கார | திரு. ரஞ்சித் மஹகும்புர | பி.எம்..பி. உதயகாந்த |
| உபதலைவர் | கணக்காளர் (பகுதி நேர அடிப்படையில்) | தலைவர் |
| நில அளவைச் சபை | நில அளவைச் சபை | நில அளவைச் சபை |

# காணி அமைச்சு
# நில அளவைச் சபை

## 31, டிசம்பர் 2014 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயல்திறன் அறிக்கை

| விபரங்கள் | குறிப்பு | 2014 | | 2013 | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா. |
| **வருமானம்** | | | | | |
| உத்தரவுப் பத்திரக் கட்டணம் | | 2,678,825 | | 2,636,150 | |
| பதிவுக் கட்டணம் | | 73,500 | | 272,500 | |
| ஏனைய வருமானம் | 7 | 674,372 | | 1,674,944 | |
| | | 1,466,684 | | | |
| மொத்த வருமானம் | | | 4,893,381 | | 4,583,594 |
| **செலவினங்கள்** | | | | | |
| **ஊழியர் சம்பளங்கள்** | | | | | |
| சம்பளங்களும் கூலிகளும் | 8 | 794,375 | | 808,897 | |
| மேலதிக நேரம், விடுமுறைக் கொடுப்பனவுகள் | | - | | 11,092 | |
| ஏனைய படிகள் | 9 | 1,730,127 | | 1,065,266 | |
| | | | (2,524,502) | | (1,885,255) |
| **பிரயாணச் செலவினங்கள்** | | | | | |
| உள்ளூர் பிரயாணம் | | | (5,211) | | (6,372) |
| **விநியோகங்கள்** | | | | | |
| காகிதாதிகளும் அலுவலக உபகரணங்களும் | | 123,503 | | 102,656 | |
| கூட்டங்களுக்கான தேநீர் உபசாரம் | | 72,495 | | 51,830 | |
| | | | (195,998) | | (154,486) |
| **பராமரிப்புச் செலவினங்கள்** | | | | | |
| இயந்திர சாதணங்களும் உபகரணங்களும் | | | (4,256) | | (21,280 |
| **சேவைகள்** | | | | | |
| தபாலும், தொடர்பாடலும் | | 134,424 | | 127,957 | |
| மின்சாரமும் தண்ணீரும் | 10 | 78,734 | | 78,734 | |
| ஏனையவைகள் | 11 | 1,359,865 | | 1,130,893 | |
| | | | (1,573,023) | | 1,130,893 |
| தேய்மானம் | | | (122,881) | | (127,304) |
| மொத்தச் செலவினங்கள் | | | (4,425,871) | | (3,532,281) |
| இக் காலத்திற்கான மிகையும் / குறையும் | | | **467,510** | | **1,051,313** |

எஸ்.எம்.பி.பி. சங்கக்கார
உபதலைவர்
நில அளவைச் சபை

பி.எம்..பி. உதயகாந்த
தலைவா
நில அளவைச் சபை

**காணி அமைச்சு**

**நில அளவைச் சபை**

**31, டிசம்பர் 2014 இல் முடிவடைந்த ஆண்டுக்கான தேறிய சொத்துகள் / மூலதன மாற்றங்களுக்கான கூற்று**

| விபரம் | மூலதன அளிப்பு | திரண்ட நிதி மிகையும் / குறையும் | மொத்தம் |
|---|---|---|---|
| 31 டிசம்பர் 2013 இல் மீதி | 1,043,030 | 6,799,331 | 7,842,361 |
| காலத்திற்கான மிகையும் / (குறையும்) | | 467,510 | 467,510 |
| 31, டிசம்பர் 2014 இல் உள்ள மீதி | 1,043,030 | 7,266,841 | 8,309,871 |

| | |
|---|---|
| எஸ்.எம்.பி.பி. சங்கக்கார | பி.எம்..பி. உதயகாந்த |
| உபதலைவர் | தலைவர் |
| நில அளவைச் சபை | நில அளவைச் சபை |

**காணி அமைச்சு**

## நில அளவைச் சபை

### 31, டிசம்பர் 2014 இல் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் கூற்று

| விபரங்கள் | குறிப்பு | 2014 | | 2013 | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **செயற்பாட்டு நடவடிக்கையிலான காசுப் பாய்ச்சல்** | | | | | |
| மிகையும் (குறையும்) | | 467,51 | | 1,051,313 | |
| **காசு அல்லாத நடவடிக்கைகள்** | | | | | |
| தேய்மானம் | | 122,881 | | 127,304 | |
| நிலையான வைப்பு வட்டி | | (674,372) | | (894,288) | |
| இடர்க் கடன் கொடுப்பனவில் (அதிகரிப்பு) / குறைவு | | 70,120 | | 102,524 | |
| கிடைக்கவேண்டியவை (அதிகரிப்பு) / குறைவு | | (1,000) | | (88,013) | |
| செலுத்தவேண்டியவை (அதிகரிப்பு) / குறைவு | | 42,002 | | (2,250) | |
| முற்பணமாகக் கிடைக்கப்பெற்ற உத்தரவுப் பத்திரக் கட்டணத்தின் அதிகரிப்பு / (குறைவு) | | 6,723 | | (60,3750 | |
| அட்டுறுச் செலவீனங்கள் அதிகரிப்பு / (குறைவு) | | (80,025) | | (16,167) | |
| தொங்கல் கணக்கு அதிகரிப்பு / (குறைவு) | | 48,598 | | | |
| | | 8,819 | | | |
| தேறிய செயற்பாட்டு நடவடிக்கையிலான காசுப் பாய்ச்சால் கூற்று | | | 11,256 | | 220,048 |
| **முதலீட்டு நடவடிக்கையிலான காசுப் பாய்ச்சல் கூற்று** | | | | | |
| நிலையான வைப்பு | | (1,625,898) | | (147,250) | |
| நிலையான வைப்பு வட்டி | | 674,372 | | 894,288 | |
| நிலையான சொத்துக் கொள்வனவு | | (116,290) | | (238,053) | |
| தேறிய முதலீட்டு நடவடிக்கையிலான காசுப் பாய்ச்சல் கூற்று | | | (1,067,816) | | 508,985 |
| **நிதியீட்ட நடவடிக்கையிலான காசுப் பாய்ச்சல் கூற்று** | | | | | |
| காசு மற்றும் காசிற்கு சமமானவற்றின் நிகர அதிகரிப்பு | | | (1,056,560) | | 729,033 |
| ஆரம்ப தவனையில் காசு மற்றும் காசிற்கு சமமானவற்றின் அதிகரிப்பு | | | 8,518,410 | | 7,789,377 |
| இறுதித் தவனையில் காசு, காசிற்கு சமமானவற்றின் அதிகரிப்பு | 1 | | 7,461,850 | | 8,518,410 |

எஸ்.எம்.பி.பி. சங்கக்கார
உபதலைவர்
நில அளவைச் சபை

பி.எம்..பி. உதயகாந்த
தலைவர்
நில அளவைச் சபை

## காணி அமைச்சு
## நில அளவைச் சபை

2014 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் கணக்குக் குறிப்புக்கள்

**1 காசு மற்றும் காசிற்கு சமமானவை**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | கையிருப்பில் உள்ள காசு | | | | | |
| | வங்கியில் உள்ள காசு | | | | | 462,794 |
| **நிலையான வைப்பு** | | | | | | |
| தொடர் இல. | வங்கி | காலம் | கணக்கு இல. | கணக்கு இல. | பெறுமதி | |
| 1 | இலங்கை வங்கி – நாராஹேன்பிட்ட | | 01 மாதம் | 7256887 | 2,000,000 | |
| 2 | இலங்கை வங்கி – நாராஹேன்பிட்ட | | 02 மாதம் | 70070797 | 2,231,301 | |
| 3 | இலங்கை வங்கி – நாராஹேன்பிட்ட | | 03 மாதம. | 74176142 | 1,767,755 | |
| 5 | இலங்கை வங்கி – நாராஹேன்பிட்ட | | 01 மாதம் | 75333664 | 1,000,000 | |
| | | | | | | 6,999,056 |
| | | | | | | 7,461,850 |

**கிடைக்க வேண்டியவை**

2

| | | |
|---|---|---|
| நிலையான வைப்பு வட்டி | 85,306 | |
| விதிக்கப்பட்ட கட்டணம் பி.சி.லியனகே | 22,068 | |
| இடைநிறுத்தப்பட்ட உத்தரவுப்பத்திரத்திற்காக விதிக்கப்பட்ட கட்டணம் | 40,000 | |
| | | 147,374 |

3 **இடர்கடன்**

| | | |
|---|---|---|
| நிலையான வைப்பு வட்டி | 36,080 | |
| விதிக்கப்பட்ட கட்டணம் பி.சி.லியனகே | 26,532 | |
| ரி.ஜி.பாளாந்து | 159,795 | |
| | | 222,407 |

**4** நிலையான வைப்பு

| தொ.இல. | Bank | Period | Account No. | Value | Rs. |
|---|---|---|---|---|---|
| 1 | இலங்கை வங்கி – நாராஹேன்பிட்ட | 01 வருடம் | 71352120 | 1,451,147 | |
| 2 | இலங்கை வங்கி – நாராஹேன்பிட்ட | 01 வருடம | 76670842 | 1,500,000 | |
| | | | | | 2,951,147 |

**காணி அமைச்சு**
**நில அளவைச் சபை**

**5. இயந்திர சாதனங்களும் உபகரணங்களும்**

| பொருட்கள் | 01.01.2014 இல் உள்ளவாறான மீதி ரூபா | இவ்வாண்டுக் காலப் பகுதியிலான கொள்வனவு ரூபா | மொத்தம் ரூபா | தேய்மானம் % | வருடாந்த தேய்மானம் ரூபா | 2013-12-31 இல் உள்ளவாறான தேறிய பெறுமதி |
|---|---|---|---|---|---|---|
| இயந்திர சாதனங்கள் | 103,559 | 33,365 | 136,924 | 20 | 27,385 | ***109,539*** |
| தளபாடங்கள் | 149,041 | 14,750 | 163,791 | 10 | 16,379 | ***147,412*** |
| கணனி | 175,565 | | 175,565 | 25 | 43,891 | ***131,674*** |
| அலுவலக உபகரணங்கள் | 29,643 | 20,400 | 50,043 | 25 | 12,511 | ***37,532*** |
| நிலஅளவைச் சபை பெயர்ப்பலகை | 65,802 | | 65,802 | 20 | 13,160 | **52,642** |
| கட்டிடமும் கட்டமைப்பும் | | 47,775 | 47,775 | 20 | 9,555 | **38,220** |
| **மொத்தம்** | **523,610** | **116,290** | **639,900** | | **122,881** | **517,019** |

**6 அட்டுறுச் செலவினங்கள்**

| தொடர் இல. | செலவினங்கள் | ரூபா |
|---|---|---|
| 1 | சம்பளங்களும் கூலிகளும் | 12,750 |
| 2 | ஊ.நே.நிதி | 18,502 |
| 3 | ஊ.ந.பொ.நிதி | 2,775 |
| 4 | தொலைத்தொடர்பு | 4,107 |
| 5 | கணக்காய்வுக் கட்டணம் | 290,000 |
| **மொதத்தம்** | | |

**279,536**

**7 ஏனைய வருமானம்**

| | | |
|---|---|---|
| தகவல் வழங்கல் | 68,000 | |
| செயலமர்வு | 1,289,000 | |
| இடைநிறுத்தப்பட்ட உத்தரவுப் பத்திரத்திற்கு விதிக்கப்பட்ட கட்டணம் | 60,000 | |
| கடனுக்கான வட்டி | 8,290 | |
| ஏனையவை | 41,394 | |
| | | **1,465,684** |

**8 சம்பளங்கள் மற்றும் கூலிகள்**

| | | |
|---|---|---|
| சம்பளமும் கூலியும் | 641,890 | |
| ஊ.நே.நிதி பங்களிப்பு | 121,988 | |
| ஊ.ந.பொ.நிதி பங்களிப்பு | 30,497 | |
| | **808,897** | **794,375** |

**9 ஏனைய படிகள்**

| | | |
|---|---|---|
| வாழ்க்கைச் செலவுப் படிகள் | 298.800 | |
| விசேட படிகள் | 119,628 | |
| தலைவரின் படிகள் | 299,157 | |
| உபதலைவரின் படிகள் | 234,817 | |
| பதில் செயலாளரின் படிகள் | 115,590 | |
| கணக்காளர் படிகள் | 68,805 | |
| நிலஅளவைச் சபை உறுப்பினர் படிகள் | 481,320 | |
| கணக்காய்வுக் குழு உறுப்பினர் படிகள் | 112,000 | |
| | | **1,730,127** |

**வழங்கல்கள்**

**11 ஏனையவை**

| | | |
|---|---|---|
| கணக்காய்வுக் கட்டணம் | 100,000 | |
| விளம்பரங்கள் | 105,452 | |
| லெமினேட்டிங் | 18,910 | |
| அச்சிடுதலும் புத்தகம் கட்டுதலும் | 70,050 | |
| மொழிபெயர்ப்பு | 6,805 | |
| பயிற்சிப் பட்டறைச் செலவினங்கள் | 1,038,648 | |
| அலுவர்களுக்கான பயிற்சி | 20,000 | |
| | | **1,359,865** |

**காணி அமைச்சு**
**நில அளவைச் சபை**

## 2014 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பொதுக் கணக்கீட்டுக் கொள்கைகள்

## 01. பொதுக் கணக்கீட்டுக் கொள்கைகள்

1.1 தயாரிப்பு முறை

நிதிக் கூற்றுகள் , இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் விதிக்கப்பட்ட கணக்கீட்டு நியமங்கள் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஆகியவற்றுக்கு அமைவாகத் தயாரிக்கப்படுகின்றன.

1.2 நிதிக் கூற்றுக்கள் அவை ஏற்பட்டதன் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன.

1.3 நிதிக் கூற்றுக்கள் மரபுரீதியான செலவின மரபொழுங்கு முறையின் கீழ் தயாரிக்கப்படுகின்றன.

## 02. சொத்துகள் அவற்றின் பெறுமதி அடிப்படையில்

2.1 நிலையான சொத்துகள் எழுதப்பட்ட பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2.2 தேய்மானம்

தேய்மானம் பின்வரும் வீதாசாரத்தில் குறைந்து செல்லும் மீதி முறையில் முன்னைய வருடங்களைப் போல் கணிப்பிடப்பட்டுள்ளது.

| சொத்துகளின் வகைகள் | வீதாசாரம் % |
|---|---|
| இயந்திர சாதனம் | 20 |
| தளபாடம் | 10 |
| கணனி | 25 |
| அலுவலக உபகரணங்கள் | 25 |
| பெயர்ப் பலகை | 20 |
| கட்டிடமும் கட்டமைப்பும் | 20 |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. LP/F/LSC/01/14/03 | ඔබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date 2015 யூலை 22

தலைவர்,

நில அளவைச் சபை

**நில அளவைச் சபையின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

நில அளவைச் சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2002 இன் 17 ஆம் இலக்க நில அளவைச் சபை அதிகாரச்சட்டத்தின் 57(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவானதோர் அறிக்கை சபையின் தலைவருக்கு 2015 யூன் 22 ஆந் திகதியன்று வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நில அளவைச் சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 1 இன் 45 பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் சகல பொருண்மையான சமமான உருப்படிகள் வெவ்வேறாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், தொழிற்துறை பாடநெறிக் கட்டண வருமானம் ரூபா 1,289,000 தொகையும் அதற்குரிய செலவினம் ரூபா 1,038,648 தொகையும் ஏனைய வருமானம் மற்றும் செலவினத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

அனுமதிபெற்ற நிலஅளவையாளர் ஒருவரால் தண்டப்பணமாக மீளாய்வாண்டின் போது கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 10,000 தொகை ஏனைய வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டமையால் வருமானம் ரூபா 10,000 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன், ஏனைய அனுமதிபெற்ற நிலஅளவையாளர் ஒருவரால் செலுத்தப்பட்டிருந்த ரூபா

10,000 தண்டப்பணத் தொகை பெற வேண்டிய தண்டப்பண வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

---

தொழிற்துறை அபிவிருத்தி பாடநெறிகளை நடாத்துதல் தொடர்பான கோவைகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய பாடநெறிக் கட்டணம் ரூபா 1,282,000 தொகையாக இருந்ததுடன், அது ரூபா 1,289,000 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 7,000 தொகையான வேறுபாட்டிற்கு காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 தொங்கல் கணக்குகள்**

---

திருத்திய நிதிக்கூற்றுக்கள் சமப்படாத காரணத்தால் ரூபா 8,819 தொகை தொங்கல் கணக்கொன்றில் பதிவு செய்யப்பட்டு கணக்கு இணக்கம் செய்யப்பட்டிருந்தது.

**2.3 பெறவேண்டிய கணக்குகள்**

---

சேவையிலிருந்து விலகிய உத்தியோகத்தரொருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 26,325 தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

---

கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 1.3.2 ஆம் பந்தியின் பிரகாரம் கொள்வனவு நடவடிக்கையொன்றுக்காக ஆகக் குறைந்தது 03 நிறுவனங்களிடமிருந்து கூறுவிலை கோரப்பட வேண்டிய போதிலும், தொழிற்துறை பாடநெறிகளை நடாத்துவதற்காக நிறுவனமொன்று தெரிவுசெய்யப்பட்டு அதற்கான பாடநெறிக் கட்டணமாக ரூபா 336,156 தொகையும் உணவு பானங்களுக்காக ரூபா 612,932 தொகையும் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்காக சபையின் நிதி விளைவுகள் ரூபா 467,510 தொகையான மிகையொன்று காணப்பட்டதுடன் இதனோடு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,051,313 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 583,803 தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் தாபன மற்றும் நிர்வாகச் செலவினம் ரூபா 916,198 ஆல் அதிகரித்தமை இவ் வீழ்ச்சிக்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

நில அளவைகள் அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட கருமங்களை நிறைவேற்றுவதன் செயல்முன்னேற்றம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 37(அ) பிரிவின் பிரகாரம் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் நில அளவைச் சபைக்கு கிடைக்கப்பெற்றருந்த மீளாய்வாண்டில் தீர்க்கப்பட இருந்த மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 106 ஆக இருந்த போதும் ஆண்டின் போது தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 81 ஆக இருந்தது. அதில் 34 அதாவது 42 சதவீதம் நீதிமன்றத்தில் வழக்கென்று காணப்படுகின்ற முறைப்பாடுகள், நில அளவைச் சபைக்குரித்தல்லாத மற்றும் ஆவணங்கள் பூரணமற்ற முறைப்பாடுகளாக இருந்ததால் நிராகரிக்கப்பட்டிருந்த போதிலும், அவை தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளாக அறிக்கையிடப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், நீதிமன்றத்தில் வழக்கென்று காணப்படுகின்ற முறைப்பாடுகளைப் பொறுப்பேற்பதற்கோ அல்லது நிராகரிப்பது தொடர்பாக குறித்துரைக்கப்பட்ட முறைமையொன்றினை நில அளவைச் சபை பின்பற்றியிருக்கவில்லை.

(ஆ) அளவைகள் அதிகாரச்சட்டத்தின் (ஈ) மற்றும் (ஊ) பிரிவுகளின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், 6 தொழில் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்துவதற்கு இலக்கிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது 03 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

(இ) அதிகாரச்சட்டத்தின் 43(1) மற்றும் (2) பிரிவுகளின் பிரகாரம் சபையினால் சகல பதிவுசெய்யப்பட்ட அனுமதிப்பத்திரத்தையுடைய நிலஅளவையாளர்களின் பெயர்ப் பட்டியலொன்று வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டிய போதிலும், 2014 ஆம் ஆண்டில் 1,070 பதிவுசெய்யப்பட்ட அனுமதிப்பத்திரத்தைக் கொண்டுள்ள நிலஅளவையாளர்கள் இருந்த போதிலும், 2014 மார்ச் 28 ஆம் திகதிய 1856 ஆம் இலக்க வர்த்தமானியில் 1,012 பதிவுசெய்யப்பட்ட அங்கீகாரம் பெற்றுள்ள நிலஅளவையாளர்களின் பெயர்கள் மாத்திரமே வெளியிடப்பட்டிருந்தன.

(ஈ) அதிகாரச்சட்டத்தின் 37(ஊ) மற்றும் (எ) பிரிவுகளின் பிரகாரம் நிலஅளவையாளர்கள் தொழில்துறை மற்றும் அதனுடன் தொடர்புடைய தகைமைகளைப் பெறும் பரீட்சைகளை நடாத்துதல், கல்வி, பயிற்சி மற்றும் ஏற்றுக்கொள்ளல் போன்ற விடயங்களின் போது யாதேனுமொரு நிலைமையொன்றை உருவாக்குவதற்காக வெளிநாட்டு அதிகாரிகளுடன் இணக்கப்பாடொன்றை ஏற்படுத்துதல் போன்ற விடயங்களைக் நோக்கமாக கொண்டிருந்த போதிலும், அவற்றை நிறைவேற்றுவதற்காக எந்தவொரு வேலைத்திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) காணி அளவைகள் அதிகாரச்சட்டத்தின் 12(1) பிரிவின் பிரகாரம் பதிவுசெய்யப்பட்ட அதிகாரம் பெற்றுள்ள நிலஅளவையாள ரொருவரால் தயாரிக்கப்பட்ட உறுதிப்படுத்தப்பட்ட குறிப்பான வகைகளுக்குரிய திட்ட வரைபடங்களின் மூலப் பிரதிகளில் அல்லது வரைபடங்களின் பிரதிகள் அந்த திட்டவரைபடம் அல்லது வரைபடங்களை உறுதிப்படுத்தியதன் பின்னர் முப்பது (30) நாட்களுக்குள் நில அளவையாளர் நாயகத்திற்கோ அல்லது அச்செயற்பாட்டிற்காக அவரால் முறைப்படி அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தருக்கோ தரவுத்தளமொன்றை தாபிப்பதற்காக வைப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும், அது தொடர்பாக 2005 நவம்பர் 23

ஆம் திகதிய 1420/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் கட்டளை வெளியிடப்பட்டிருந்ததுடன், நில அளவைச் சபையால் 2006 ஏப்ரல் 20 ஆம் திகதிய LSC/Cir/02/2006 ஆம் இலக்க சுற்றறிக்கையும் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், 2015 மே 15 ஆம் திகதி வரையிலும் அது தொடர்பாக போதியளவு நடவடிக்கையொன்று எடுக்கப்படாமல் இருந்ததுடன், கணக்காய்வு அறிக்கைகளிலும் இது தொடர்பில் தொடர்ச்சியாக அறிக்கையிப்பட்டிருந்தது.

### 4.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

அளவை சபை மூலம் மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்டிருந்த 03 தொழில் திறன் அபிவிருத்தி பாடநெறிகளின் முதலாவது செயலமர்விற்காக 119 பேர் சமூகமளித்திருந்ததுடன் அதற்காக ரூபா 97,141 தொகை செலவிடப்பட்டிருந்த போதும் இரண்டாம் மற்றும் மூன்றாம் செயலமர்வுகளுக்காக முறையே 352 பேர் மற்றும் 365 பேர் சமூகமளித்திருந்ததுடன், அதற்காக செலவினம் முறையே ரூபா 423,459 தொகையும் ரூபா 519,547 தொகையுமாக இருந்தன. அதன் பிரகாரம் ஒருவருக்காக செலவிடப்பட்டிருந்த கிரயம் இரண்டாவது செயலமர்வின் போது 47 சதவீதத்தாலும் மூன்றாவது செயலமர்வின் போது 74 சதவீதத்தாலும் அதிகரித்திருந்தன.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

தொழிற்துறை அபிவிருத்தி பாடநெறிகள் நடாத்தலின் உள்ளபடியான வருமானம் ரூபா 1,289,000 ஆகவும் உள்ளபடியான செலவினம் ரூபா 1,038,648 ஆக இருந்த போதிலும், மீளாய்வாண்டின் பாதீட்டின் பிரகாரம் வருமானம் ரூபா 375,000 ஆகவும் செலவினம் ரூபா 140,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தமையால் வருமானம் 244 சதவீதம் மற்றும் செலவினம் 642 சதவீத முரண்களையும் காட்டியது.

## 5.2 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வு பந்தி தொடர்பான அவதானிப்புகள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை II ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவு மற்றும் 2009 சனவரி 06 ஆம் திகதிய டீஎம்எஸ்/ஈ/35/4/391 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் படி, 2009 ஆம் ஆண்டின் சனவரி மாதம் முதல் சபையின் செயலாளர் பதவி வெற்றிடமாக நிலவுவதுடன் இதற்காக நிரந்தர அடிப்படையில் ஓர் உத்தியோகத்தர் சேர்க்கப்படும் வரை உரிய பதவிக்காக தகைமை பெற்றுள்ள உத்தியோகத்தரொருவர் பதில் செயலாளராக நியமிக்கப்படுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இதன் படி, சபைச் செயலாளர் பதவிக்காக நில அளவைத் திணைக்களத்தின் ஓர் உத்தியோகத்தர் பதில் கடமையாற்றுவதற்கு நியமிக்கப்பட்டிருந்ததுடன் நிரந்தர செயலாளர் ஒருவரை நியமிக்குமாறு 2012 யூலை 05 ஆம் திகதி பொது முயற்சிகள் குழுவால் கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் அப் பதவியை நிரப்புவதற்கு 2014 மே 30 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 5.3 சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்பை நிறைவேற்றல்

அதிகாரம் பெற்ற நில அளவையாளர்களால் அளவிட்டு தயாரிக்கப்பட்ட திட்ட வரைபடம் அவர்களின் பொறுப்பிலேயே காணப்படுவதுடன், குறித்த அதிகாரம் பெற்ற நில அளவையாளர் மரணித்தல், வெளிநாடு செல்லல் மற்றும் சேவையில் ஈடுபடாத சந்தர்ப்பத்தில் திட்ட வரைபடத்தின் பிரதிகளை பொது மக்களுக்கு பெற்றுக்கொள்வதில் கஸ்டமாக இருந்த போதிலும், அவர்களால் தயாரிக்கப்பட்ட திட்ட வரைபடங்களின் பிரதிகளை திணைக்களத்திற்கு பெற்றுக்கொள்வதற்கான முறைமையொன்றை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

------------------------------------------------------------------

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிக் கட்டுப்பாடு

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)